இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.
எம்.சி.ஒ.பி.எண்.328/2024 மசா.1

பெயர். திரு.சரவணன் த/பெ.

கிராமம். தொழில்.

நாள். 24.10.2024. வயது.

2024 –ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24–ந் தேதி Act X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி திருமதி. C. கார்த்திகா, எம்.ஏ., பி.எல்., தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**.

வயது வருமானம் காட்டக்கூடிய வாகனம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என் நண்பர் வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்று தானே கீழேவிழுந்து விபத்தை வரவழைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. மாடு குறுக்கே வந்துவிட்டது. இந்த விபத்தை பொறுத்தவரை நான் 3ம் தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் காப்பீடு முறையாக நிலுவையில் இருந்ததால் இழப்பீடு கிடைப்பதாக இருந்தால் 2ம் எதிர்மனுதாரர்தான் கொடுக்க வேண்டுமென்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் பி.காம் படித்துள்ளேன். இரண்டாவது வருடம் படித்தபோது விபத்து ஏற்பட்டது. விபத்திற்கு பிறகு படிக்கவில்லை. 09.10.2021ம் தேதி அன்று மாலை 5.20 மணிக்கு விபத்து நடந்தது. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியும். திருவாரூர் மருத்துவமனையில் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். அங்கிருந்து டிஸ்சார்ஜ் ஆகி கோயம்புத்துர் கங்கா மருத்துவமனையில் ஒருவாரம் உள்நோயாளியாக இருந்தேன். திருவாருரில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரித்தார்கள். விபத்து பற்றி நாதான் தகவல் சொன்னேன். திருவாரூர் மருத்துவமனையில் விபத்து நடந்த அன்றே 6.10 மணிக்கு சேர்ந்தேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் இருசக்கர வாகனம் நான் ஓட்டி செல்லும்போது தானாக கீழே விழுந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் பின்னால்தான் உட்கார்ந்து போனேன். விபத்து நடந்து ஒருவருடம் 2 நாட்கள் கழித்துதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவ மனையல் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்கு வந்தேன். வீட்டில்தான் இருந்தேன்.

எங்கள் வீட்டில் இருந்து குடவாசல் காவல் நிலையத்திற்கு 10 கிமீ தூரம் இருக்கும். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட லைசென்ஸ் இருக்கிறது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 2021ம் வருடம் லெட்சுமி டிரைவிங் ஸ்கூலில் முடித்து திருவாரூர் ஆர்டிஓ அலுவலகத்தில் லைசென்ஸ் எடுத்தேன். தாக்கல் செய்ய முடியும். நான்தான் தலைகவசம் அணியாமலும், பாலிசி விதிமுறைகளை மதிக்காமலும் லைசென்ஸ் இல்லாமலும் வாகனத்தை ஓட்டி கீழேவிழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றும் விபத்திற்கு நான்தான் காணரம் என்றும் சொன்னால் சரியல்ல. நானே இருசக்கர வாகனம் ஓட்டி கீழேவிழுந்ததால் விபத்திற்கு இழப்பீடு கேட்க முடியாது என்று தெரிந்த பிறகு பின்யேசனை செய்து ரோகித், கார்த்திகேயன் எல்லோரும் கலந்து ஆலோசித்து காவல் துறை ஒத்துழைப்புடன் காலதாமதமாக பொய்யாக வழக்கு பதிவு செய்து அதன்பேரில் இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் நான் பின்னால் உட்கார்ந்து போனதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு பாதிப்புகள் மனுவில் சொன்னப்படி அதிகாக இல்லை என்றும் மிகைப்படுத்தி சொல்லியிருக்கிறேன் எ்னறால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய தக்கது என்றால் சரியல்ல. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட லைசென்ஸ் இல்லை என்றால் சரியல்ல. பின்னால் அமர்ந்து பயணம் செய்பவரக்கு கூடுதலாக காப்பீடு பிரிமியம் 1ம் எதிர்மனுதாரர் செலுத்தவில்லை என்பதாலும் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. மருத்துவ காப்பீடு அட்டை இருக்கிறது. மருத்துவ காப்பீடு அட்டையில் மருத்துவ செலவு தெகையை எற்கனவே வாங்கிவிட்டேன் என்றும் மீண்டும் இழப்பீடு வாங்க இந்த மனுவை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் தவறாக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**